J Jaffna Sci. Association, 2021, 3(1), 32-41

**Research Article**

# இலங்கையில் தமிழ் - சிங்கள அரச வம்சங்களுக்கிடையில் நடைபெற்ற திருமண உறவு: ஒரு வரலாற்றுப் பார்வை

[1]திருமதி அனித்தா சசிகரன்

*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

*Received: 8 June 2021,* *Accepted: 7 August 2021*

## ஆய்வுச்சுருக்கம்

தென்னாசியாவில் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. அவற்றை வெளிப்படுத்தும் முதல் பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் ஆகிய நூல்களில் இலங்கையின் மனித வரலாறும், பண்பாட்டு வரலாறும் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்து ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வுடன் தோன்றியதாகக் கூறுகின்றன. இதே பாளி வரலாற்று இலக்கியங்களில் தென்னாசியாவில் தமிழகத்தை அடுத்து தமிழர் வாழ்ந்த நாடாகக் கூறப்படும் இலங்கையில் தமிழர்களை அக்கரையில் இருந்தும், சோழ, பாண்டிய நாடுகளில் இருந்தும் வணிகர்களாக, படையெடுப்பாளராக வந்துபோன அந்நியர்கள் என்ற பொருள்படக் கூறுகின்றன. பிற்காலத்தில் இப்பாளி இலக்கியங்களை மூலநூல்களாகக் கொண்டெழுந்த வரலாற்று ஆய்வுகள் பலவும் வடஇந்திய குடியேற்றத்தை ஆரியர் குடியேற்றம் எனவும், அவர்களின் வழிவந்தவர்களே சிங்கள மக்கள் எனவும், தமிழர்கள் அவ்வப்போது இலங்கைக்கு வந்து சென்ற அந்நிய நாட்டவர்கள் எனப் பொருள்படக் கூறுகின்றன. ஆனால் கி.மு3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறும் பாளி இலக்கியங்கள் கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கையில் தமிழ் - சிங்கள மன்னர்கள் மாறிமாறி ஆட்சி செய்த வரலாற்றைக் கூறுகின்றன. இந்த அரசியல் வரலாற்றில் அல்லது ஆதிக்கப்படர்ச்சிக்கான போராட்டத்தில் சிங்கள மன்னர்கள் சார்பில் தமிழ்படைவீரர்களும் தமிழர்களின் படையில் சிங்களப்படை வீரர்களும் இருந்ததற்கும் பங்குகொண்டதற்கும் பாளி இலக்கியங்களிலேயே ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்த இணக்கப்பாடு அல்லது ஒற்றுமை என்பது அரசியலில் மட்டுமன்றி திருமண உறவுகளிலும், வர்த்தகத்திலும், மதத்திலும், கலைத்துறையிலும் ஏற்பட்டிருந்தமைக்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆயினும் இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் தமிழ் - சிங்கள மக்களிடையே இருக்கக்கூடிய இனநல்லுறவினை முன்னிலைப்படுத்தி ஆய்வு செய்வதைக்காட்டிலும் அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளை முன்னிலைப்படுத்தி கூறுவதிலேயே அதிக அக்கறை செலுத்தியுள்ளனர். எனவே வரலாற்றுக் காலத்திலிருந்தே தமிழ்-சிங்கள சமூகங்களிடையே நல்லுறவு இருந்தது என்பதை வெளிக்கொணர்தல், இன்றைய தமிழ்-சிங்கள சமூகத்தினருக்கும் கடந்தகால இச்சமூகங்களுக்குமிடையே ஒரு நெருங்கிய திருமண உறவு வெவ்வேறு காலப்பகுதிகளில் நடைபெற்றிருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதனூடாக இன, மத முரண்பாடு தொடர்பான எண்ணப்போக்கு, விரோத மனப்பாங்குகளை நீக்கி ஐக்கியத்தை ஏற்படுத்துதல் என்பன இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாக உள்ளன. இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் சான்றுகள், ஆதாரங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்கள், பிறநாட்டார் குறிப்புக்கள் மற்றும் தொல்பொருள் மூலாதாரங்கள் என்ற வகையில் தமிழ், சிங்களக் கல்வெட்டுக்கள் போன்றன கையாளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் இவ்வாய்வுத் தலைப்புடன் தொடர்புடைய

**Corresponding author:** Mrs.Aniththa Sasikaran, Lecturer, Department of History, Faculty of Arts, University of Jaffna. e-mail: anithas@univ.jfn.ac.lk

This article is published under the Creative Commons (CC BY-NC-ND) License.
( http://creativecommons.org/licenses/by-nd/4.0/ ).
This license permits use, distribution and reproduction, non-commercial, provided that the original work is properly cited and is not changed in anyway.

விடயங்களைத் தரும் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளக்கட்டுரைகள் நாளிதழ்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே வரலாற்றுக் காலந்தொட்டு தமிழ்-சிங்கள மக்களிடையே நல்லுறவு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறுவதன் மூலம் இலங்கையில் ஒரு பல்லினப்பண்பாடு கொண்ட சமுதாயம் வரலாற்றுத் தொடக்க காலத்திலிருந்தே தோன்றி வளர்ந்தது எனலாம்.

திறவுச்சொற்கள்: தமிழர்; சிங்களவர்; திருமண உறவு; அரசவம்சம்; இலங்கை;

## 1 அறிமுகம்

இலங்கையின் வரலாற்றுக் காலத்திலே அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம், தம்பதெனியா, யாப்பகூவா, கம்பளை, கோட்டை ஆகிய அரசுகளை தமிழ், சிங்கள, இலம்பகர்ண, கலிங்க மன்னர்களும் கண்டிய இராசதானி காலப்பிற்பகுதியில் நாயக்க மன்னர்களும் மாறிமாறி ஆட்சி செய்து வந்துள்ளனர். இருப்பினும் தமிழ் - சிங்கள மன்னர்களுக்கெனத் தொன்மையான, தொடர்ச்சியான, இணைந்த வரலாறு காணப்படுகின்றன. இலங்கையில் பதவியிழந்த சிங்கள மன்னர்கள் தமிழ்நாடு சென்று படையுதவி பெற்று ஆட்சிக்கு வந்ததற்கும், தமிழ்நாட்டு வம்சங்கள் இலங்கை மீது படையெடுத்த போது இங்கிருந்த தமிழர்கள் அவர்களுடன் இணைந்து சிங்கள மன்னர்களின் ஆட்சியைக் கைப்பற்றியதற்கும் ஆதாரங்கள் உண்டு. மேலும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு நாடு பலவீனப்பட்ட சந்தர்ப்பங்களில் இங்கிருந்த தமிழர்கள், சிங்கள மக்களுடன் சேர்ந்து ஆட்சியாளர்களைத் தெரிவு செய்ததற்கும், ஆள்புல விஸ்தரிப்பிற்காக நடந்த போராட்டங்களில் சிங்கள மன்னர்களின் பக்கத்தில் தமிழ்ப்படைவீரர்களும், தமிழ் மன்னர்களின் பக்கத்தில் சிங்களப் படைவீரர்களும் இருந்து ஆட்சியதிகாரத்திற்காகப் போரிட்டதற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு பௌத்தமதம் பரவிய போது கூடவே அம்மதத்தையும், அம்மதத்தை பின்பற்றிய மக்களின் வரலாற்றையும் வாய்மொழியாகப் பேணும் மரபு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வரலாற்று மரபை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 4ஆம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட தீபவம்சமும், கி.பி 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சமும் இலங்கையில் வாழ்ந்த தொடக்ககால சமூகமாக சிங்கள மக்களைக் குறிப்பிடுகின்றன. இவர்கள் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களின் வழித்தோன்றல்கள் எனவும் இவர்களின் வருகையுடனேயே இலங்கையில் மனித வரலாறு தோன்றியதாகவும் விபரிக்கின்றன (Geiger, Mahavamsa, 1950, pp. 51-55). ஆனால் தமிழ் சமூகத்தினரை தென்னிந்தியாவிலிருந்து அவ்வப்போது வந்துபோன வர்த்தகர்கள், படையெடுப்பாளர்கள் என்போரின் வழித்தோன்றல்கள் எனக் கூறுகின்றன (Geiger, Mahavamsa, 1950, pp. 51- 55). இப்பாளி, சிங்கள இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த பல சிங்கள வரலாற்றாசிரியர்களும் தமிழ் - சிங்கள சமூகத்திடம் நிலவிய நல்லுறவுகளை ஆராய்வதில் அக்கறை காட்டுவதை விட, தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையிலான ஆட்சி உரிமைக்கான போராட்டங்களை, ஆதிக்கப்போராட்டங்களை இனப்போராட்டங்களாகச் சித்தரிப்பதிலேயே அதிக அக்கறை காட்டி வந்துள்ளனர். ஆனால் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொல்லியல் ஆய்வுகள் இற்றைக்கு 28000 ஆண்டுகளுக்கு முன்னரே ஓரளவு நாகரிகமுடைய மக்கள் மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதி வரை வாழ்ந்துள்ளனர் என்பதையும் இன்றைய தமிழ் - சிங்கள சமூகத்தின் மூதாதையினர் இந்தியாவிலிருந்து குறிப்பாக தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து குடியேறிய ஒரே பண்பாட்டைக் கொண்ட மக்கள் என்பதையும் நிரூபித்துள்ளன.

இன்று சிங்களவர்கள் சிங்கள மொழி பேசுபவர்களாகவும் பௌத்தத்தை கடைப்பிடிப்பவர்களாகவும், தமிழர்கள் தமிழ் மொழி பேசுபவர்களாகவும் இந்து மதத்தை கடைப்பிடிப்பவர்களாகவும் இருப்பதைக் கொண்டு முற்பட்ட காலங்களிலும் அவ்வாறே இம்மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற தப்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் சிங்கள மன்னர்கள்